# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பாஸ்கா காலம் ஏழாம் ஞாயிறு | 17 மே 2026
(உலக சமூகத் தொடர்பு ஞாயிறு)

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**
*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: குடும்பம் - ஒன்றித்து நடத்தல்



# இறைவேண்டலிலும் அன்பான தொடர்பிலும் ஒன்றாகப் பயணித்தல்

இன்றைய நற்செய்தியில், இயேசு தம் கண்களை வானத்தை நோக்கி உயர்த்தி தந்தையிடம் மன்றாடுவதைப் பார்க்கிறோம். “தலைமைக் குருவின் இறைவேண்டல்” என்று அழைக்கப்படும் இந்த மன்றாட்டு, முதலாவதாக, இயேசுவுக்கும் அவருடைய தந்தைக்கும் இடையிலான வலுவான உறவையும், இரண்டாவதாக, இயேசு தம் சீடர்களின் மீது கொண்டுள்ள ஆழமான அன்பையும் வெளிப்படுத்துகிறது. இயேசு அவர்களின் பாதுகாப்பிற்காக மட்டுமல்லாமல், அவர்கள் ஒற்றுமையாக நிலைத்திருக்கவும், தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணியைத் தொடரவும் மன்றாடுகிறார்.

இயேசுவின் இந்த நெருக்கமான இறைவேண்டல், அவருக்கும் தந்தைக்கும் இடையே உள்ள ஒரு ஆழமான ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. அன்பு, பற்றுறுதி மற்றும் முழுமையான சுய அர்ப்பணிப்பில் வேரூன்றிய ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. அது பிறர்மீதான அன்பாகப் பெருகி வழியும் ஓர் ஒன்றிப்பாகும். தம் சீடர்களுக்காக மன்றாடும்போது, இயேசு அதே ஒற்றுமையை அவர்களுக்கும் அளிக்கிறார். அவரும் தந்தையும் ஒன்றாயிருப்பதுபோல, அவர்களும் ஒன்றாய் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். அது கடவுளின் இதயத்தையே பிரதிபலிக்கும் ஓர் ஒற்றுமையாகும். அத்தகைய ஒற்றுமை அவர்கள் எதிர்நோக்கும் சவால்களின் ஊடாக அவர்களை வேரூன்றி உலகில் அவருடைய பணியைத் தொடர அவர்களைச் செயல்படுத்தும் என்பதை இயேசு அறிவார்.

இந்தச் செய்தி இன்று நம் குடும்பங்களுக்கு ஒரு சக்திவாய்ந்த செய்தியாகும். குடும்பம் பெரும்பாலும் “குட்டித் திருஅவை” என்று அழைக்கப்படுகிறது. இது கடவுளின் அன்பு முதன்முதலாக அனுபவிக்கப்பட்டு பகிரப்படும் ஓர் இடமாகும். இயேசு தந்தையுடன் இடைவிடாமல் தொடர்பில் இருப்பதுபோலவே, குடும்பங்களும் ஒருவருக்கொருவர் வெளிப்படையான மற்றும் அன்புத்தொடர்பை வளர்த்துக்கொள்ள அழைக்கப்படுகின்றன. குடும்ப உறுப்பினர்கள் செவிசாய்க்கவும், கனிவாகப் பேசவும், ஒருவருக்கொருவரின் போராட்டங்களையும் மகிழ்ச்சியையும் புரிந்துகொள்ளவும் நேரத்தை ஒதுக்கும்போது, அவர்கள் இயேசுவுக்கும் தந்தைக்கும் இடையிலான ஒற்றுமையைப் பிரதிபலிக்கிறார்கள்.

பெரும்பாலும் தனிமனிதவாதத்தையும், பிரிவினையையும் ஊக்குவிக்கும் உலகில், அன்பும் அமைதியும் நிறைந்த ஓர் இல்லத்தைக் கட்டியெழுப்புவதற்கு குடும்பத்துணை இன்றியமையாதது. இந்தத் துணையின் மையத்தில் இறைவேண்டல் உள்ளது. இயேசு தம் சீடர்களுக்காகப் பரிந்துபேசுவதுபோல, குடும்பங்களும் ஒருவருக்கொருவர் மன்றாட அழைக்கப்படுகின்றனர். ஒவ்வொரு உறுப்பினரையும் கடவுளுடைய பராமரிப்பிலும் அருளிலும் ஒப்படைக்கின்றனர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக மன்றாடும்போதும், தம்பதியர் ஒருவருக்கொருவர் மன்றாடும்போதும், குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து இறைவேண்டல் செய்யும்போதும் அவர்கள் தங்களை ஒன்றிணைக்கும் அன்பின் பிணைப்புகளைப் பலப்படுத்துகிறார்கள்.

இறைவேண்டலில் வேரூன்றி, அன்றாட செயல்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் இந்த எளிய ஆனால் ஆற்றல்வாய்ந்த பழக்கவழக்கங்கள் ஒற்றுமையை வளர்க்கின்றன. புரிதலை ஆழப்படுத்துகின்றன. மேலும் குடும்பங்களுக்குள் நீடித்த அமைதியைக் கொண்டுவருகின்றன.

**இன்றைய இறைவார்த்தை:**
திருத்தூதர்பணிகள் 1:12-14
திருப்பாடல் 27: 1,4, 7-8
1 பேதுரு 4: 13-16
யோவான் 17:1-11

குடும்ப இறைவேண்டலுக்கு அதற்கே உரிய தனித்தன்மைகள் உண்டு. அது கணவன் மனைவி இருவரும் சேர்ந்தும், பெற்றோர், பிள்ளைகள் இணைந்தும் கூட்டாக செய்யப்படும் இறைவேண்டலாகும்.
– புனித இரண்டாம் ஜோன் போல்

INTERNAL CIRCULATION ONLY
BUL 20/2026
வெளியீடு: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | Email: api@archkl.org